# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



**தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.**

**லூக்கா 2:10**






**December'20**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

பெத்லேகேம் பாலகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில்
திருச்சபை குடும்பத்தினர் அனைவருக்கும்
கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு-2021 நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

...... என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது. அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; இதோ, இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். **And Mary said, my soul magnifies the Lord, and my spirit rejoices in God my Savior, for he has looked on the humble estate of his servant. For behold, from now on generation will call me blessed.** லூக்கா/ **Luke 1:46-48.**

**அட்வென்ட்**(Advent)

திருச்சபை மக்களாகிய நாம் இந்த நாட்களில் "அட்வென்ட்" காலங்களை அனுசரிக்க அழைக்கப்படுகின்றோம். இந்த "அட்வென்ட்" காலம் என்பது இயேசுவின் வருகையை எதிர்நோக்கும் காலம் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மேசியாவின் வருகையை மிகுந்த ஆவலோடு இஸ்ரவேல் மக்கள் எதிர்பார்த்தனர், அவர்களுக்கு விடுதலை வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது, யூதர்களுக்கு விடுதலை அளிப்பவர் மேசியா என்று நம்பி எதிர்பார்த்தனர், இதனையே ஒரு கொண்டாட்டமாக நினைத்து கொண்டாடினார்கள். இந்தக் கொண்டாட்டத்தை மகிழ்ச்சியாக கருதினார்கள் இதையே தீர்க்கதரிசிகள் நற்செய்தியாக கொண்டாடினார்கள். (**Celebrating the Good new**s) நாமும் இந்த நாட்களை கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை கொண்டாட அழைக்கப்படுகின்றோம்.

இந்த மாதம் முழுவதும் கிறிஸ்து பிறப்பின் திருநாளை திருச்சபை குடும்பமாக கொண்டாட இருக்கின்றோம். இந்த **Covid -19** காலகட்டத்தில் இக்கட்டான சூழ்நிலையிலும் நமது திருச்சபையில் அனைத்து கிறிஸ்து பிறப்பின் நிகழ்ச்சிகளை நாம் Online வழியாக நடத்துவது என்று தீர்மானித்து இருக்கின்றோம். அதற்கான ஒழுங்குகள் திருச்சபையில் செய்யப்பட்டுள்ளது. எனவே திருச்சபையின் ஐக்கிய சங்கத்தினர், குடும்பத்தினர் இந்த நிகழ்ச்சிகளில் ஜெபத்துடன் பங்கெடுத்து உங்களது நிகழ்ச்சிகளை அளிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றிர்கள்.

தொடர்ந்து இந்த காலகட்டத்தில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்து இருக்கவும், தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக குறிப்பாக **UAE** உள்ள மக்களுக்காக, அவர்களில் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக ஊக்கமாய் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

Merry Christmas

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்...

*Rev. S. P. Baskar*


The people who walked in darkness have seen a great light; Isaiah 9:2.

May this Christmas end the Present Year on a Cheerful note
and make way for a fresh and bright New Year.
Here's wishing you all a

# Merry Christmas &
# Happy New Year 2021



Ms. B.N Kariss Angelo
Mrs. Nancy Angelo & Rev. S.P Baskar



# கிறிஸ்து பிறப்பின் செய்தி

## சமாதான பிரபுவைக் களிப்புடன் வழிபடு

## Rejoice and worship the Prince of Peace

Luke 2:10-20.

### முன்னுரை:

இயேசுவின் பிறப்பின் நற்செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் எவ்வாறு அந்தச் செய்தியை ஏற்று மகிழ்ந்து, அதை பிரசித்தம் செய்து ஆண்டவரை துதித்து மகிமைப் படுத்தினார்கள் என்பதை இந்த பகுதி விவரிக்கின்றது. கிறிஸ்து பிறப்பின் செய்தி கொண்டாட்டத்தின் செய்தியாகும். கடவுளின் மீட்புச் செயலின் மையமே விடுதலையும், கொண்டாட்டமும் தான். கடவுள் இந்த உலகில் மனிதனாக வந்தபோது தூதர்கள் மூலம் கொடுக்கப்பட்ட செய்தி மகிழ்ச்சியின் செய்தி.....

தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். லூக்கா 2:10.

**And the angel said to them, " Fear not, for behold, I bring you good news of great joy that will be for all the people. Luke 2:10.**

மீட்பின் செய்தியோடு இயேசு தன் பணியை இவ்வுலகில் ஆரம்பித்தார். ஏழைகள் நற்செய்தி கேட்டபோதும், பார்வையற்றவர் பார்வை பெறும் போதும் அடிமைத்தனக் கட்டுகளிலிருந்து மக்கள் விடுவிக்கப்படும் போதும், சிறுமைப் பட்டவர்கள் மீட்கப்படும் போதும் யாரால் அவர்களது மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும்? பழைய ஏற்பாட்டுப் பகுதியில் விடுதலை ஆண்டு என்பது அடிமைத்தனத்திலிருந்து. (லேவி:25:10)

## *கடவுள் குறை உள்ளோரைக்கணப் படுத்துகிறார்.
## God Honors the under privileged

முதன்முதலில் இயேசுவின் பிறப்பின் செய்தியைக் கேட்டவர்கள் மேய்ப்பர்கள். இவர்கள் சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாகப் புறக்கணிக்கப்பட்டவர்கள். மரியாளின் கீதத்தில் தாழ்மை உள்ளவர்கள் கடவுளால் உயர்த்தப்படும் நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. (லூக் 1:48-53) இயேசு பெத்லகேமில் பிறந்தபோது அரசரோ ஆளுனரோ (Rulers-அதிகார வர்க்கம்) என்ன நடக்கிறது என்று அறியாதிருந்தார்கள். ஏரோது வேதபாரகர், பரிசேயரே அழைத்து விசாரித்தார். எழுத்தாளர், ஆராய்ச்சியாளர், அறிவிற் சிறந்தோர் ஆகியோருக்கு அறிவிக்கப்படவில்லை. சாஸ்திரிகள் ஏரோதிடம் சென்று விசாரித்தனர். பிரதான ஆசாரியர், பரிசேயர், சதுசேயர் மேசியாவின் வருகையை எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கும் அறிவிக்கப்படவில்லை. கடவுள் தாழ்ந்தவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்களைக் கனப்படுத்தி உயர்த்துகிறவர். தாங்கள் செய்யும் தொழிலினால் அவர்களைத் தாழ்ந்தவர்கள் என்று புறக்கணிப்பது தவறு. இயேசு இவ்வுலகில் நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்த போது ஆயக்காரன் என்று ஒதுக்கப்பட்ட சகேயுவேடு உறவுகொண்டு அவரைக் அட படுத்தினார். ஒதுக்கப்பட்ட சமாரியப் பெண்ணைக் கனப்படுத்தினார். இவ்வுலகில் நாமும் ஒருவரை அவர்களுடைய தொழிலின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று பிரித்து குறையுள்ளோர் ஒதுக்கப்படும் போது தடைகளைத் தகர்த்து அவர்களைக் கனப்படுத்தி இயேசுவின் பிறப்பினை மகிழ்வுடன் கொண்டாடுவோம்......

## *கடவுள் பூமியிலே அனைவருக்கும் சமாதானத்தைக் கொண்டு வந்தார்.
## God brought peace to all on earth

கடவுளின் பிறப்பின் செய்தி சமாதானத்தின் செய்தி. வலியோரால் வருத்தப்பட்டு சமாதானமின்றி வாழ்ந்த எளியவருக்கு மீட்பின் செய்தி. பூமியிலே சமாதானம் (லூக் 2:14) இயேசு இவ்வுலகில் வந்த கம்பனியின் நோக்கத்தை அறிவிக்கின்றார் (லூக் 4:18) வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களைத் தம்மிடம் வந்து இளைப்பாறும் படி அழைக்கிறார். (மத் 11:28) வழியை ஆயத்தம் பண்ண வந்த முன் தூதர் யோவான் ஸ்நானகனும் ஒடுக்கப்படுகிற வலியோரை எச்சரிக்கிறார். வறுமையால் வாடுபவர்களுக்கு உதவி செய்யுமாறு உடையும் உணவும் கொடுக்கும்படிக் கூறுகிறார். (லுக் 3:11) இடுக்கண் செய்யாதே என்று அதிகார வர்க்கத்திடமும் (லூக் 3:14) கட்டளைக்கு மேல்

ஒன்றும் வாங்காதே (லூக் 3:13) என்று வரி வசூலிப்பவரிடமும் கூறி எளியோரின் சுமையை நீக்கினார். கடவுள் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கும் சமாதானம் கொண்டு வந்தார். கி-மு 734-கி-மு 732-அசிரியா அரசர் டி.திகிலாத் பிலேசர் இஸ்ரவேலை மேற்கொண்டார். (2 இராஜா 15:29) கலிலேயா, நப்தலி தேசம் அனைத்தையும் பிடித்து இஸ்ரவேலரைச் சிறையாகக் கொண்டு போனார். ஏசையா தீர்க்கர் சிறைப்பட்ட தேசத்திற்கு வரும் மகிமையை முன்னுரைக்கிறார் (ஏசாயா 9:1,சங்125:5) தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (மத் 4:13-15) இயேசு கடற்கரைக்கு அருகாமையில் உள்ள கப்பர் நகூமிலே வாசம் பண்ணினார். இயேசு பூமியிலே வருத்தப்படுகிறவர்களுக்கும் சமாதானம் அருளுகிறார் (யோவான் 14:27) இன்றைக்கு சமாதானம் இல்லாமல் இருப்பவர்களுக்கு சமாதானத்தை கொடுப்பது இயேசுவின் பிறப்பினை மகிழ்வுடன் கொண்டாடுவது ஆகும்...

## கடவுள் உலகோர் அனைவருக்கும் இரட்சிப்பை அருளுகிறார்.
## God offers salvation to all

எல்லா மக்களுக்கும் மிகுந்து மகிழ்ச்சி இது (லூக் 1:10) கிறிஸ்து என்னும் இரட்சகர் (லூக் 2:11) இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் (ஏசாயா 9:2) நீர் பூமியின் கடைசி பரியந்தம் என்னுடைய ரட்சிப்பாய்யிருக்கும்படி உண்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைப்பேன் (ஏசாயா 49:6) அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத் 1:21) பாவத்தினால் கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்ட மனுக்குலத்திற்கு மன்னிப்பும் அவரோடு மீண்டும் ஒப்புரவு ஆகும் மகிழ்வின் செய்தி இயேசுவின் பிறப்பின் செய்தி ஆகும். இச்செய்தி மூலம் மனிதனுக்கு கடவுள் கட்டளை கொடுக்கவில்லை மாறாக தாம் என்ன செய்யப்போகிறார் என்ற செய்தியின் இரட்சிப்பு எல்லோருக்கும் தரப்பட்டுள்ளது.

இயேசுவின் பிறப்பின் செய்தியைக் கேட்ட மேய்ப்பர்கள் தீவிரமாய் சென்று முன்னணையில் கிடைத்திரயிக்கிற பிள்ளையைக் கண்டார்கள்.(லூக் 2:16) அவர்கள் கண்டு மகிழ்ந்து, துதித்து, பிரசித்தம் பண்ணி ஆண்டவரை மகிமைப்படுத்தி திரும்பி சென்றார்கள்.

நாமும் அவ்வாறு நம்மை அர்ப்பணித்து கிறிஸ்து பிறப்பின் நோக்கத்தை, நற்செய்தியை புரிந்துகொண்டு சமாதான பிரபுவாகிய நம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பை மகிழ்வுடன் கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.
**Rev. S. P. Baskar**



# மரியான்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே..!

உங்கள் அனைவருக்கும் பெத்லகேம் பாலகன்
இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில்
என் அன்பில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப்
பெற்றான்; அவளிடத்தில் கிறிஸ்து என்னப்படுகிற
இயேசு பிறந்தார். மத் 1:16.
...and Jacob the father of Joseph the husband of Mary,
of whom Jesus was born, who is called Christ. Matt 1:16.

## மரியாள் ஆண்டவரின் தாய்

மரியான் ஒரு கன்னிப்பெண், கணவனை அறியேன் என்று கூறுவது அவருடைய உண்மை தன்மையின் அடையாளமாகும். மரியாள் கருவுற்று எலிசபெத்தை சந்திக்க சென்றபோது இதோ ஆண்டவரின் தாயார் என்னைச் சந்திக்க வந்தது எவ்வளவு மகிழ்ச்சி என்று சொன்னவுடனே வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளிற்று என்று லூக்கா 1:44'ல் பார்க்கிறோம். இதுவே மரியாள் ஆண்டவரின் தாயார் என்பதை உயர்த்தி காண்பிப்பதை காண்கிறோம்.

## *மரியாள் ஆண்டவரை சுமந்தவர்

திருச்சபை மரியாளுக்கு ஒரு சிறப்பான இடத்தை வழங்கியுள்ளது. இவர் பிறந்த நாள் இவருக்கு தேவதூதர் தோன்றி இயேசு கிறிஸ்து இவரிடம் பிறக்கப் போகிறார் என்ற அறிவித்த நாள் (மார்ச்-25) இந்த நாள் மரியாளின் சிறப்பு நாளாக திருச்சபையில் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளில் மரியாளுக்கு ஒரு பட்டத்தையும் திருச்சபை வழங்கியுள்ளது அது "ஆண்டவரை சுமந்தவர்" என்பதை திருச்சபை அடையாளப்படுத்துகிறது.

## *மரியாளின் அனுபவம்

"Experience of A life of Dedication " "அர்ப்பணிப்பின் அனுபவம் பெற்றார்" (மரியாள்) அவள் தன் முதற் பேரான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதி ருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். லூக்கா 2:7

And she gave birth to her firstborn son and wrapped him in swaddling clothes and laid him in a manger, because there was no place for them the inn. Luke 2:7
இந்தப் பகுதியில் மரியாளின் அர்ப்பணிப்பை நமக்கு காண்பிக்கின்றது. கன்னியின் வயிற்றில் கருத்தரிப்பது என்பது இதுவரை கேள்விப்படாத ஒரு நிகழ்வு ஆகும். இந்த நிலையில் மரியாள் தன்னை அர்ப்பணிக்கிறார். லூக்கா 1:26-38'ல் உள்ள பகுதியில் மரியாள் இயேசுவின் பிறப்பின் அனுபவத்தை ஏற்றுக்கொள்வதை காண்கிறோம். இது தேவதூதன் மூலம் வரும் வாக்குக்கு தன்னை ஒப்பு கொடுக்கின்றார் அல்லது அர்ப்பணிக்கிறார்.

"இதோ நான் ஆண்டவருக்கு அடிமை என்று தன்னை அர்ப்பணிக்கிறார்"

இது கடவுளின் நோக்கம் நிறைவேற தன்னை அர்ப்பணித்தார், இந்த அர்ப்பணிப்பின் மூலம்

***# மரியாள் தெய்வீகமாக தேர்வு செய்யப்படுகின்றார்.***

***# மரியாள் தெய்வீக ஆசீர்வாதம் பெற்றுக் கொள்கிறார்.***

***# மரியாள் தெய்வீக குழந்தையை பெற்றெடுத்தார்....***

இது மரியாளுக்கு கிடைத்து அனுபவமாகும். நாமும் இந்த அர்ப்பணிப்பின் அனுபவம் பெற்று கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை பிறருடன் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக..!

கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயரம்மா...
Mrs. E. Nancy Baskar.



# செயலர் மடல்..

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் கொண்ட சர்வ வல்ல கடவுளின் திருப்பெயரால் விசுவாச வீட்டார் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட நல் வாழ்த்துக்களை சபை குழுவின் சார்பில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெட்டி மறையும் மின்னலைப் போல 11 மாதங்களை கடந்து 12-வது மாதத்திற்குள் கடந்து வந்துவிட்டோம்.. கடந்த பதினோரு மாத காலம் நாம் சாய்ந்து விழுந்து போன நேரத்திலும், சோர்ந்து போன நேரத்திலும்.. நம்மை அரவணைத்து கண்ணீரிலே உடனிருந்து, தனிமையிலே துணைநின்று, துயரத்தில் ஆறுதல் தந்து, மகிழ்ச்சியினால் நிரப்பின கர்த்தரை நன்றியுடன் துதிப்போம். மீண்டும் ஒரு பண்டிகை காலத்தில் மகிழ்ச்சி வெள்ளத்தில் பயணிக்க நமக்கு ஒரு நல்வாய்ப்பை அருளிய தேவனை மனதார போற்றுவோம். கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டத்தை எதிர்பார்த்திருக்கும் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொண்டு; இம்மானுவேலின் துணையோடு வசனத்துக்கு கீழ்ப்படிந்து வாழ்வை அலங்கரிப்போம்.

இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூட்டங்கள் மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு உதவி புரிந்த அருள்திரு.எஸ்.பி.பாஸ்கர் போதகர்ஐயா அவர்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அமீரகத்தில் அவ்வப்போது அறிவிக்கபடும் பொதுவான ஒழுங்கு முறைகளை பொறுப்போடு கடைபிடிப்போம். நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவரும் ஒருவரோடொருவர் வீட்டில் இருந்தவாறே தொடர்பில் இருந்து, வாழ்த்துக்கள் கூறி ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி ஜெபத்திலே தாங்குவோம்.

கிறிஸ்து பிறப்பு பண்டிகை காலத்தின் ஆராதனைகளிலும் சிறப்பு நிகழ்வுகளிலும் பங்கேற்க, ஆயத்தப்பட கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் அருள் புரிவாராக.

அன்பென்னும் பண்புகளை ஆணித்தரமாய் சொல்லிவிட ஆயுளையே அவர் கொடுத்தார் அகிலத்தின் விடுதலைக்காய் அவர்பிறந்த நாளின்று அறியாமை போக்கிடுவோம்.. பகைமையதை அறுத்தெறிந்து பாசமோடு வாழ்ந்திடுவோம்...

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்... எஸ். சுரேஷ் ராஜன்

இனிய
கிறிஸ்துமஸ்
நல்வாழ்த்துகள்

# கிறிஸ்து எதற்காக மனிதனாக உலகத்தில் வந்தார்

கிறிஸ்துவானவர் உலகத்தில் மானிடனாக வந்தார் என ஒவ்வொரு வருடமும் கிறிஸ்து பிறப்பு பண்டிகையை விமரிசையாக கொண்டாடுகிறோம். கிறிஸ்து ஏன் மனிதனாக வந்தார் அவரது வருகையினால் நாம் நமது வாழ்வில் பெற்றுக் கொண்டது என்ன என்று சிந்தித்து பார்த்திருக்கிறோமா?

**தேவனை வெளிப்படுத்தும் வண்ணமாக:** தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான ***குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.*** யோவான் 1:9

அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? ***என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான்,*** அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? யோவான் 14:9

**மாதிரியாக:** பொறுமையையம் அறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து ***இயேசுவினுடைய மாதிரியின் படியே,*** நீங்கள் ஏக சிந்தையுள்ளவர் களாயிருக்கும்படி உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக. ரோமர் 15:6

**பிசாசின் கிரியைகளை அழிக்க:** பாவஞ்செய்கிறவன் பிசாசினலுண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். பிசாசினுடைய ***கிரியைகளை அழிக்கும் படிக்கே*** தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1யோவான: 3:8

**ஒப்பரவாக்க:** முன்னே அன்னியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த உங்களையும் பரிசுத்தராகவும், குற்றமற்வா களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறத்தும் படியாக அவருடைய மாம்சசரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ***ஒப்புரவாக்கினார்.*** கொலோசேயர்:1:21

**பாவ பரிகார பலியாக:** இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் ***பலியிடப்பட்டதினாலே*** அந்த சித்தத்தின் படி நாம் ***பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்.***. எபிரேயர் 10:10

இவரோ பாவங்களுக்காக ***ஒரே பலியை செலுத்தி*** என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதப்படியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். எபிரேயர் 10: 12&13

**பரிசுத்தமாக்க**: உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். ***நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்*** என்று எழுதியிருக்கிறதே. 1பேதுரு 1:15&16

**அன்புள்ளவர்களாக்க:** பிரியமானவாகளே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். தம்முடைய ஒரே பேரான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. 1யோவான் 4:7&9

ஆம் அன்பானவர்களே!! இவ்வண்ணமாக நம்மில் அனபு கூர்ந்து நம்மை தமக்கு சொந்தமாக்கிக் கொள்ள தம்மடைய சொந்த குமாரனையே மனிதனாக இந்த மண்ணில் தந்த அவரது அன்புக்கு நாம் பாத்திரவான்களாக இருக்கிறோமா? நம்மூலம் பிறர் தேவனின் அன்பை கண்டுகொள்ளும் விதமாக நம் வாழ்வு அமைந்திருக்கிறதா?

சிந்திப்போம்! செயல்படுவோம்!!.

## Merry Christmas & Happy New Year

## Best Wishes from...M. Nesamony & Family












# INTERMEDIATE

roshan

joshua


naveen

Ms. Diniya Sunshine

# கலியாண வஸ்திரம்...

‘சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்’ (மத் 22: 12)

ராஜாவின் கலியாணம் இது.. அழைக்கப்பட்ட அநேகர் வர மறுத்துவிட்டார்கள். ஆகவே வழிசந்துகளில் சென்று அங்கு காணப்பட்டவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். அப்பொழுது கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்திருந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா பிரவேசித்தார். கலியாணவஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு ‘சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய், என்று ராஜா கேட்டான். ’இந்த கலியாண வஸ்திரத்தின் விசேஷம் என்ன?



அந்த நாட்களில் இவ்விதமான பெரிய ராஜாக்களின்



கலியாணத்திற்கு வருகிற ஒவ்வொருவருக்கும் அவர்கள் கலியாண சாலைக்குள் நுழைவதற்கு முன்பாக இலவசமாக இந்த கலியாண வஸ்திரம் கொடுக்கப்படும், அதை அணிந்துக்கொண்டுதான் அவர்கள்உள்ளேசெல்லவேண்டும்.
இந்த ராஜாவின் கலியாண விருந்தில் பங்கேற்ற மக்கள், வழியோரங்களில் காணப்பட்ட எளியமக்கள், வறியவர்கள், அவர்கள் அணிந்திருந்த உடைகள் மிகவும் அற்பமானவைகளும், கிழிந்தவைகளுமாயிருந்திருக்கும். ராஜா கொடுத்த

வஸ்திரமோ மிகவும் விலை மதிப்பான உயர்ந்த வஸ்திரம். ஆனால் அதில் ஒரு மனிதன் இந்த வஸ்திரத்தை வாங்க மறுத்துவிட்டான். அதை அணிய மறுத்துவிட்டான் இது எதை காண்பிக்கிறது? அவனுடைய வஸ்திரமே அவனுக்குப் போதுமென்று எண்ணியிருப்பான். அவன் ராஜா கொடுத்த இலவசமான வஸ்திரத்தை பெறவிரும்பவில்லை அந்த மனிதனின் முடிவுஎன்னவாயிற்று? அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடப்பட்டான். அன்பானவர்களே! இந்த கலியாணவஸ்திரம் எதைக்குறிக்கிறது?

நாம் ஒவ்வொருவரும் ஒரு ஆண்டு கழித்து ஒரு புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கிறோம். நம்முடைய காலம் கடந்து போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால் நிச்சயமாக ஒரு நாள் இது நின்றுவிடும். நாம் இந்த ஓட்டத்தை முடிக்கும்படியான நாள், வேளை.. அநேக சமயங்களில் நாம் இதை எண்ணிப்பார்ப்பதில்லை. வேதம் நம்முடைய வாழ்க்கை ஒரு புகைக்கு ஒப்பாயிருக்கிறது என்று சொல்லுகிறது. அப்படியானால் இந்த வாழ்க்கையின் நோக்கமென்ன? இந்த வாழ்க்கையில் நாம் சாதிக்கக்கூடிய காரியம் என்ன? நம்முடைய இந்த வாழ்க்கையில் நான் செய்யக்கூடிய அர்த்தமுள்ள காரியம் என்ன என்பதை அநேக சமயங்களில் சிந்திப்பதில்லை.

நித்தியத்திற்கான காரியத்தை எண்ணிப்பார்ப்போம். அது நம்முடைய ஆத்துமாவிற்கு பிரயோஜனமாக இருக்கும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் நித்தியத்துக்கான எல்லா காரியங்களையும் இலவசமாக நமக்கு சம்பாதித்து வைத்திருக்கிறார். பாவ மன்னிப்பு, பாவத்திலிருந்து விடுதலை, நித்திய மரணத்திலிருந்து விடுதலை, பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலையைக் கொடுத்திருக்கிறார். பாவத்தின் வல்லமையிலிருந்து அனுதினமும் விடுபட்டு நித்தியத்தை நோக்கி வெற்றி நடைபோட நமக்கு தேவன் நம்முடைய கரங்களிலே நித்தியமான ஒரு வேத புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகவே அவைகளை நாம் பின்பற்றுவதில் ஜாக்கிரதையாக இருப்போம்.நிச்சயம் வெற்றியடைவோம்.

**தேவன் இலவசமாக கொடுக்கும் இரட்சிப்பை, இரட்சிப்பின் வஸ்திரத்தைக் குறிக்கிறது (ஏசாயா 61:10) உனக்கு இந்த இரட்சிப்பின் வஸ்திரம் உண்டா?**

**நீங்கள் கிறிஸ்தவ பெயரைக் கொண்டிருக்கலாம், ஆலயத்தில் அங்கத்தினராகவும் இருக்கலாம்.. ஆனால் இரட்சிப்பின் வஸ்திரம் இல்லாவிட்டால் ராஜாவின் பந்தியில், பரலோகராஜ்யத்தில் உனக்கு இடமில்லை.**

**இந்த இரட்சிப்பின் வஸ்திரத்ததை பெற்றுக்கொள்.**

Mr. Santhosh Kumar / Youth Fellowship

# Christmas Message

Every Christmas, a friend of mine writes a long letter to his wife, reviewing the events of the year and dreaming about the future. He always tells her how much he loves her, and why. He also writes a letter to each of his daughters. His words of love make an unforgettable Christmas present.

We could say that the original Christmas love letter was Jesus, the Word made flesh. John highlights this truth in his gospel: "In the beginning was the Word, and the Word was with God, and the Word was God" (John 1:1). In ancient philosophy, the Greek for Word, logos, suggested a divine mind or order that unites reality, but John expands the definition to reveal the Word as a person: Jesus, the Son of God who was "with God in the beginning" (v. 2). This Word, the Father's "one and only Son," "became flesh and made his dwelling among us" (v. 14). Through Jesus the Word, God reveals Himself perfectly.

Theologians have grappled with this beautiful mystery for centuries. However, much we may not understand, we can be certain that Jesus as the Word gives light to our dark world (v. 9). If we believe in Him, we can experience the gift of being God's beloved children (v. 12).

Jesus, God's love letter to us, has come and made His home among us. Now that's an amazing Christmas gift!

A VERY MERRY CHRISTMAS and Happy New Year!

Mrs. Pamela Daniel / Women's Fellowship

# மிகுந்த சந்தோஷம் உண்டாக்கும் நற்செய்தி

# Good news that brings great joy

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரக்குகளுக்கு நமக்காய் பிறந்த இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் தோத்திரங்களை தெரிவித்து கொள்ளுகிறேன்.

கர்த்தர் நம்மை இந்த ஆண்டு முழுவதும் கண்மணிபோல காத்து, கொரோனோ என்கிற இந்த கொள்ளை நோய்க்கு நம்மை தப்புவித்து காத்து வந்த ஆண்டவர்க்கு உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றி சொல்லுவோம். கர்த்தர் இந்த மாதத்தில் நமக்கும் வாக்கு கொடுக்கிற வசனம் (லூக்கா :2-10) பயப்படாதே மிகுந்த சந்தோஷம் உண்டாகும் நற்செய்தி உனக்கு சொல்லுகிறேன் என்பதாய்.

அன்பான சாகோதர்களே...இயேசுகிறிஸ்து நமக்காய் அவருடைய பிறப்பின் மூலமாய் நற்செய்தியை சொல்லுகிறார். பயப்படாதே...மிகுந்த சந்தோஷம் உண்டாக்கும்; என்று இந்த ஆண்டு தொடங்கின நாள் முதற்கொண்டு கொரோனோ பயம் எங்கு பார்த்தாலும் எதை தொட்டாலும் பயம், எங்கு போனாலும் பயம்..,ஆகவேதான் இயேசு சொல்லுகிறார்.. பயப்படாதே..!! மிகுந்த சந்தோசம் உண்டாகும்.

1.இயேசு என்றால் இரட்சகர் மட்டும் அல்ல, (Jesus is not only our Savior)
2.இயேசு என்றால் மிகுந்த சந்தோசம்!!, (Jesus is our greatest Joy)
3.இயேசு என்றால் நற்செய்தி !! (Jesus is the Gospel)

எனவேதான் ஒரு பக்தன் இப்படியாய் சொல்லுகிறார் இயேசு என்றதுமே எனக்கோர் இன்பம் பிறக்குதம்மா..,இயேசு என்று சொல்லிப்பாருங்கள் இன்பம் பிறக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாக்கும்.

யாருக்கு தெரியுமா மிகுந்த சந்தோஷம்.. பயந்து கொண்டு இருப்பவர்களுக்கு. நீங்கள் கூட ஏதோ ஒரு காரியத்தை குறித்து பயந்து கொண்டு இருக்கலாம்; அதனால் இயேசு சொல்லுகிறார் என் மகனே உனக்கு மிகுந்த சந்தோசம் கொடுக்கும் படியாய்; உனக்காக நான் (இயேசு) பிறந்து இருக்கிறேன்..,உன்னை மீட்டு எடுக்க உன்னை உயர்த்த உன்னை ஆசிர்வதிக்க உனக்காக தாவீதின் ஊரிலிலே மட்டும் அல்ல உன் உள்ளதிலே பிறக்கவேண்டும் என்று விறும்புகிறேன். உன் உள்ளதிலே எனக்கு இடம் கொடுப்பாயா..? என்று இயேசு மிகவும் ஏக்கத்தோடே கேட்கிறார் இதை வாசித்து கொண்டு இருக்கிற என் அன்பு சகோதரனே.. உங்களை பார்த்துதான் இயேசு கேட்கிறார்.. என் மகனே எனக்கு உன் உள்ளதிலே இடம் கொடுப்பாயா என்று., இயேசுவுக்கு உங்கள் உள்ளத்திலே இடம் கொடுத்துப்பாருங்கள் வருகின்ற 2021'ம் புதிய ஆண்டில் மிகுந்த சந்தோசம் உண்டாக்கும்படியாய் கர்த்தர் உங்கள் எல்லைகளையும், உங்கள் பிள்ளைகளையும், உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார்..ஆமென் !

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சமாதானமும் கிருபையும் வருகின்ற புதிய ஆண்டில் நிறைவாய் இருப்பதாக. ஆமென் ! உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவிதித்துகொள்கிறேன் .

இப்படிக்கு உங்கள் அன்பு சகோதரன்...

**Ashok Kumar**


**Men's Fellowship**

STORYTELLING

# Nativity Story



# KIDS COLORING



# CHRISTMAS QUIZ PRIMARY

**1** Where did Mary and Joseph have to sleep?



a) in a house
b) in a stable
c) in a castle

**2** Where did the baby Jesus sleep?

a) in a manger
b) in a cradle
c) in a bed



**3** What did the wise men follow?

a) a cart
b) a shepherd
c) a star



**4** What was Joseph's job?



a) a shepherd
b) a carpenter
c) a king

**5** What place did Joseph and Mary go to?

a) Nazareth
b) Jerusalem
c) Bethlehem



**6** Did Joseph and Mary see an angel?



a) yes
b) no
c) maybe

**7** What did the wise men bring?

a) gold, silver, wheat
b) gold, incense, myrrh
c) gold, water, wheat



**8** What was the evil king's name?



a) Augustus
b) Caesar
c) Herod

**9** What colour is Santa's suit?



a) red
b) green
c) white

**10** What is Santa's lead reindeer called?

a) Vixen
b) Rudolph
c) Donder



**11** What night does Santa come?

a) 24 December
b) 25 December
c) 26 December




**12** How does Santa get into the house?

a) through the window
b) through the door
c) through the chimney



**13** What does Santa carry the toys in?

a) in a sack
b) in a box
c) in a pocket



**14** What do children hang up for Santa to put the toys in?




a) a coat
b) a bag
c) a stocking

**15** Who helpes Santa to make toys at the North Pole?

a) reindeer
b) elves
c) witches



**16** What do reindeer pull?



a) a sleigh
b) a cart
c) a boat

**17** What bird is cooked for Christmas dinner?



a) duck
b) chicken
c) turkey

**18** Where are the presents kept before opening them?

a) in the window
b) under the tree
c) behind the door



**19** What is hung outside on the door?



a) a wreath
b) a bell
c) a star

**20** What kind of songs are sung?

a) carols
b) pop songs
c) gospels



**21** Before electricity, these were put on the trees.

a) lamps
b) torches
C. Candles



**22** What is common four-letter abbreviation of Christmas?



a) Ymas
b) Wmas
c) Xmas

**23** What kind of calendar is opened by children leading up to Christmas?



a) Advent
b) Year
c) Month

**24** What's a popular Christmas dessert?

a) chocolate
b) pancake
c) pudding



Write your Name Here

# Christmas WORD SEARCH

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| F | T | N | E | M | A | N | R | O | S | Y | R | R | E | M |
| I | N | A | M | W | O | N | S | A | H | T | A | E | R | W |
| R | S | T | O | C | K | I | N | G | P | E | A | C | E | P |
| E | C | Y | N | B | S | T | D | E | C | E | M | B | E | R |
| P | Q | H | V | W | A | E | G | S | T | E | L | V | R | L |
| L | S | W | R | C | M | A | I | N | L | I | E | E | Z | G |
| A | Z | N | L | I | R | I | E | K | G | E | I | R | K | W |
| C | E | A | O | L | S | V | S | H | O | N | I | W | T | Y |
| E | U | V | A | W | D | T | T | E | D | O | I | G | Y | R |
| S | S | N | I | A | M | S | M | E | L | N | C | L | H | M |
| T | D | T | K | T | T | A | E | A | T | T | I | R | N | J |
| A | N | V | F | J | S | R | N | E | S | M | O | J | M | T |
| R | G | X | L | I | Q | E | R | T | A | X | D | E | X | W |
| M | Y | Z | Y | T | G | X | F | F | J | T | N | R | N | J |

PRIMARY

ADVENT
CHRISTMAS
COOKIES
DECEMBER
LIGHTS
MERRY
TREE
MISELTOE


PEACE
SANTACLAUS
GIFTS
REINDEER
SLEIGH
SNOWMAN
STAR
ORNAMENT

STOCKING
WREATH
FIREPLACE
WINTER
FESTIVE
GARLAND
SNOWMAN
FAMILY

# JUNIOR Christmas fun

Match the words to the correct pictures to complete the crossword. Then find a secret message.

- bells
- candle
- candy cane
- card
- chimney
- Christmas tree
- elf
- gingerbread
- holly
- letter
- lights
- ornaments
- presents
- reindeer
- Santa Claus
- sleigh
- snowman
- stocking
- wreath






The secret message is ________ ______________ ________ ____________ lead home.

# Nativity Quiz

## Inter & Senior

First, be sure to read the accounts of Jesus' birth in Matthew 1:18-2:11 and Luke 1:26-2:19. Each version offers different details to give you the full story. Now, take a look at the questions below and see if you can tell which statements are true and which are false (write a T or an F on the line provided). If the statement is false, go ahead and explain why (in the space provided). And now, you should be ready to share what you've learned (or been reminded of) with others.




____ 1. The angel Gabriel told Mary that she was going to be the mother of the Son of the Highest.




____ 2. An angel told Joseph that the child Mary was carrying would be named Jesus.




____ 3. Joseph and Mary traveled from Bethlehem to Nazareth to pay their taxes.




____ 4. The city welcomed Mary and Joseph and found them a place to stay.




____ 5. Jesus was born in a stable and placed in a crib.




____ 6. A host of angels sang at Jesus' birth, fulfilling the tradition of singing at the birth of a boy.




____ 7. An angel told some shepherds in a far-off field that a Savior was born in the city of David.




____ 8. Wise men saw an unusually bright star in the sky and followed it to Bethlehem.




____ 9. The wise men brought the baby Jesus food, clothing, and fresh straw for his bed.




____ 10. King Herod wanted to find the baby Jesus to get to know him because everyone was talking about him.

# Manna Participants... NOVEMBER

| Kidz Colouring | Word Search | Cross Word | Bible Quiz |
|---|---|---|---|
| HAZEL HARTLYN | JASON ERIC | ROSHAN | ROSHAN |
| CRASSLIN DEVONA | JOHAN SANJO | SHELBINO PAUL | DENNIS |
| REAGAN SHAN | JEREMIAH | JONATHAN | JOSHIKA |
| KARISS ANGELO | JONATHAN | | JOSHUA |
| CHRIS GABRIEL | | | |
| JANIA PRENI | | | |
| JOHAN SANJO | | | |
| JEMIMA ASHNI | | | |
| JASON ERIC | | | |

You did it!
Congratulations



ARE YOU UP FOR THE CHALLENGE?

COMING SOON

29 JAN

MEMORY VERSE Challenge

GET READY

Bible Quiz

# மாற்கு 11-16 & லூக்கா 1-4

1. இயேசுவுக்கு எங்கே பசியுண்டாயிற்று?
2. இயேசு---------------,--------------,செலுத்துங்கள் என்றார்?
3. யார்? யாருக்கு ஐயோ! என்று சொல்லப்பட்டது?
4. ஸ்தோத்திரப்பாட்டை பாடியே பின்பு எங்கு புறப்பட்டு போனார்கள்?
5. யாரை சிலுவையை சுமக்கும்படி பலவந்தம் பண்ணினார்கள்?
6. ஒருவருடன் ஒருவர் என்னச்சொல்லிக் கொண்டார்கள்?
7. சகரியா யாருடைய ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்?
8. சிமியோன் என்னும் பேர்கொண்ட மனுஷன் எங்கு இருந்தார்?
9. மெல்கி யாருடைய குமாரன்?
10. ஜெப ஆலயத்தில் இயேசுவுக்கு யாருடைய புத்தகம் கொடுக்கப்பட்டது?

## நவம்பர் மாத விடை எழுதியவர்கள்

திருமதி. நான்சி பாஸ்கர்
திரு.ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட்
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன்
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மேக்டலின்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. ஜமுனா ராணி

## நவம்பர் மாத விடை

| | |
|---|---|
| 1. மாற்கு 1:21 | 2. மாற்கு 2:14 |
| 3. மாற்கு 3:25 | 4. மாற்கு 4:35 |
| 5. மாற்கு 5:22 | 6. மாற்கு 6:17 |
| 7. மாற்கு 7:34 | 8. மாற்கு 8:27 |
| 9. மாற்கு 9:33 | 10.மாற்கு10:42 |

**துன்பங்களை களைந்துவிட**
**துயரங்களை தகர்த்துவிட**
**விடியலன வந்துவிட்டார்**
**விண்ணுலக தேவன்...**

**ஹேப்பி கிறிஸ்துமஸ்**

# பாடல் பிறந்த கதை

# சந்தோஷம் பொங்குதே...



சந்தோஷம் பொங்குதே சந்தோஷம் பொங்குதே
சந்தோஷம் என்னில் பொங்குதே
இயேசு என்னை இரட்சித்தார் முற்றும் என்னை மாற்றினார்
சந்தோஷம் பொங்கிப் பொங்குதே

DME படிப்பை வெற்றியுடன் முடித்து, தன் விடுமுறை நாட்களைக் கழிக்கத் தன் அக்கா வீட்டிற்குச் சென்றான், 20-வயது நிரம்பிய வாலிபன் மைக்கேல். அக்காவின் கணவர் மறைத்திரு. D. Williams பட்டுக்கோட்டை CSI ஆலயப் போதகர். அந்நாட்களில் பிரதரன் அசெம்பிளி ஊழியர்கள் பாண்டிச்சேரியிலிருந்து அங்கு வந்து உயிர் மீட்சிக் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தனர். மிஷினரி ஜான் கொடுத்த தேவசெய்தியின் மூலம் ஆவியானவர் பேச, 18.9.1969 அன்று மைக்கேல் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான்.

பின்னர் மைக்கேல் வேலையிலமர்ந்த போது, ஆண்டவரின் அழைப்பைத் தன் உள்ளத்தில் உணர்ந்தார். எனவே, அவருடைய ஊழியம் செய்ய, 1971-ம் ஆண்டு இந்திய இல்லந்தோறும் நற்செய்தி இயக்கத்தில் முழுநேரப் பணியாளனாகச் சேர்ந்தார். 1972-ம் ஆண்டு இவ்வியக்கத்தின் முன்னோடி மிஷனரியாகத் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஹரூர் சென்றார். அங்கிருந்த சிலோன் இந்தியப்பொது மிஷன் ஆலயத்தை மையமாகக் கொண்டு இல்லந்தோறும் நற்செய்தியை அறிவித்தார்.

அந்நாட்களில் அத்திருச்சபையின் ஞாயிறுபள்ளிப் பொறுப்பும் மைக்கேலிடம் கொடுக்கபப்பட்டது. அந்த ஞாயிறு பள்ளிப் பிள்ளைகள் உற்சாகமாகப் பாடுவதைப் பார்த்து, அவர்களுக்குத்தான் அறிந்த பாடல்களைக் கற்றுக் கொடுக்க முயன்றார். ஆனால் அவையனைத்தும் அப்பிள்ளைகளுக்கு முன்னரே தெரிந்திருந்தது. எனவே, அப்பிள்ளைகளை உற்சாகப்படுத்த, புதுப்பாடல்களை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்.

இந்நிலையில் தனது இரட்சிப்பின் அனுபவத்தையே தன் சாட்சிப் பாடலாகவும், அப்பிள்ளைகளுக்கு சவால் அழைப்பாகவும் இருக்க எண்ணி, இப்பாடலை இயற்றினார்.

பிள்ளைகள் புரிந்து பாடக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்;ட இப்பாடலின் 4 சரணங்களையும் சகோதரர் மைக்கேல் ஒரே நாளில் இயற்றி முடித்தார். இப்பாடலின் ராகத்தையும் அவரே அமைத்தார். அடுத்த ஞாயிறே, மைக்கேலின் ஆர்மோனியப் பின்னிசையுடன் ஞாயிறு பள்ளியில் இப்பாடல் அரங்கேற்றமானது. இந்த உற்சாகப் பாடலின் மூலம், பிள்ளைகள் இரட்சிப்பின் சந்தோஷத்தை அறிந்து கொண்டனர்.

பின்னர்IEHC-ன் வருடாந்திர கன்வென்ஷன் கூட்டங்களில் மிஷனரிகள் இப்பாடலைப் பாடினர். 1974-ம் ஆண்டு IEHC நாகர்கோவில் பகுதிகளில் தங்கள் நற்செய்திப் பணியைச் செய்து வந்தனர். அக்குழுவில் IEHC-ன் முக்கிய பாடகரான சகொதரர் டி.தேவ பிச்சை முன்னோடி மிஷனரியாக இருந்தார். அந்த ஆண்டின் CSI திருமண்டல கன்வென்ஷன் கூட்டங்களின் பாடல் பொறுப்பாளர் புதுப்பாடல்களைத் தேடி தேவபிச்சையிடம் வந்தார். சகோதரர் தேவபிச்சை

அவருக்குப் பாடிக்காட்டிய பாடல்களில் இப்பாடலும் ஒன்று. இப்பாடலைத் தெரிந்தெடுத்து திருமண்டல கன்வென்ஷன் கூட்டங்களில் பாடினர்.

பின்னர் 1975-ம் ஆண்டு, ஆசீர்வாத இளைஞர் இயக்க பிளெஸ்ஸோ முகாமிலும் இப்பாடல் பாடப்பட்டு பிரபலமானது. இதற்கு திருச்சி இசைவல்லுரனராக திரு. கூலிங் இசை அமைத்து, பிரபல பாடகியான திருமதி பாரதி பாடலைப் பாடவைத்து, பதிவு செய்து, இசைத் தட்டில் வெளியிட்டார். இதின் மூலம் இப்பாடல் பலருக்கும் அறிமுகமானது.

இப்பாடலின் வார்த்தைகளை ஆராய்ந்த நிபுணர்கள், “நானோ பரலோகத்தில்’ என்ற வரி சுய நல நோக்கை வெளிப்படு;த்துகிறது,” எனக் கருத்துத் தெரிவித்தனர். பாடலைக் கேட்பவரின் ஆசையைத் து}ண்டி, அவர்களையும் இவ்வரிக்கு உரிமையாளர்களாக மாற்றுவதே தன் எண்ணமாயிருந்தது, என சகோதரர் மைக்கேல் தெளிவுபடுத்துகிறார்.




REMEMBER THIS SCHEDULES IN YOUR DAILY PRAYERS.

FOR MORE DETAILS ON THIS PROGRAMS PLEASE CONTACT THE PRESBYTER OR THE CHURCH SECREATRY

# Happy Birthday!

| | |
|---|---|
| 01-Dec | Mr. Jeffry Immanuel |
| 02-Dec | Ms. Angelin Sophia Nelson |
| 04-Dec | Mr. Abishek |
| 04-Dec | Mstr. Chris Gabriel |
| 11-Dec | Mstr. Aaren Christo |
| 12-Dec | Mr. Jayapradheep Christopher |
| 13-Dec | Mr. Richard |
| 16-Dec | Mr. Biju Mohan |
| 24-Dec | Mstr. Rishon Yojit |
| 25-Dec | Mstr. Haryter Samuel |
| 25-Dec | Mr. Balaji Ramaiyan |
| 27-Dec | Mstr. Shelbino Paul |
| 28-Dec | Mrs. Prasana Aruldhas |
| 31-Dec | Sathish Kumar.T |
| 31-Dec | Ms. M. Angeline Shally |

December

# Wedding Anniversary

08-Dec Mr. Alvin Kumar Asirmanns & Mrs. Subha

20-Dec Mr. Santhosh Kumar & Mrs. Helina

27-Dec Mr. Selvistor Solomon & Mrs. Manjushah

27-Dec Dr. Pradeev Raj & Mrs. Ramya Mergaratee

28-Dec Mr. Herchil Harish & Mrs. Blessy Grace Jonish

28-Dec Mr. Joel Ranjith Kumar & Mrs. Shafeena

29-Dec Dr. G. Alexis Joy & Mrs. Padma Joy

29-Dec Mr. Nesamony M & Mrs. Hepsi Bai

29-Dec Mr. P.David Raj & Mrs. Vasantha Selva Kumari

29-Dec Mr. Robert Wilson & Mrs. Aji Kumari

29-Dec Mr. Derin Joy & Mrs. Fanny Esther

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - டிசம்பர் 2020

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 1நாளா. 29 | 2பேதுரு 3 | மீகா 6 | லூக்கா 15 |
| 2 | 2நாளா. 1 | 1யோவான் 1 | மீகா 7 | லூக்கா 16 |
| 3 | 2நாளா. 2 | 1யோவான் 2 | நாகூம் 1 | லூக்கா 17 |
| 4 | 2நாளா. 3,4 | 1யோவான் 3 | நாகூம் 2 | லூக்கா 18 |
| 5 | 2நாளா. 5,6:1-11 | 1யோவான் 4 | நாகூம் 3 | லூக்கா 19 |
| 6 | 2நாளா. 6:12-42 | 1யோவான் 5 | ஆபகூக் 1 | லூக்கா 20 |
| 7 | 2நாளா. 7 | 2யோவான் 1 | ஆபகூக் 2 | லூக்கா 21 |
| 8 | 2நாளா. 8 | 3யோவான் 1 | ஆபகூக் 3 | லூக்கா 22 |
| 9 | 2நாளா. 9 | யுதா 1 | செப்பனியா 1 | லூக்கா 23 |
| 10 | 2நாளா. 10 | வெளிப்ப. 1 | செப்பனியா 2 | லூக்கா 24 |
| 11 | 2நாளா. 11,12 | வெளிப்ப. 2 | செப்பனியா 3 | யோவான் 1 |
| 12 | 2நாளா. 13 | வெளிப்ப. 3 | ஆகாய் 1 | யோவான் 2 |
| 13 | 2நாளா. 14,15 | வெளிப்ப. 4 | ஆகாய் 2 | யோவான் 3 |
| 14 | 2நாளா. 16 | வெளிப்ப. 5 | சகரியா 1 | யோவான் 4 |
| 15 | 2நாளா. 17 | வெளிப்ப. 6 | சகரியா 2 | யோவான் 5 |
| 16 | 2நாளா. 18 | வெளிப்ப. 7 | சகரியா 3 | யோவான் 6 |
| 17 | 2நாளா. 19,20 | வெளிப்ப. 8 | சகரியா 4 | யோவான் 7 |
| 18 | 2நாளா. 21 | வெளிப்ப. 9 | சகரியா 5 | யோவான் 8 |
| 19 | 2நாளா. 22,23 | வெளிப்ப. 10 | சகரியா 6 | யோவான் 9 |
| 20 | 2நாளா. 24 | வெளிப்ப. 11 | சகரியா 7 | யோவான் 10 |
| 21 | 2நாளா. 25 | வெளிப்ப. 12 | சகரியா 8 | யோவான் 11 |
| 22 | 2நாளா. 26 | வெளிப்ப. 13 | சகரியா 9 | யோவான் 12 |
| 23 | 2நாளா. 27,28 | வெளிப்ப. 14 | சகரியா 10 | யோவான் 13 |
| 24 | 2நாளா. 29 | வெளிப்ப. 15 | சகரியா 11 | யோவான் 14 |
| 25 | 2நாளா. 30 | வெளிப்ப. 16 | சகரியா 12,13:1 | யோவான் 15 |
| 26 | 2நாளா. 31 | வெளிப்ப. 17 | சகரியா 13:2-9 | யோவான் 16 |
| 27 | 2நாளா. 32 | வெளிப்ப. 18 | சகரியா 14 | யோவான் 17 |
| 28 | 2நாளா. 33 | வெளிப்ப. 19 | மல்கியா 1 | யோவான் 18 |
| 29 | 2நாளா. 34 | வெளிப்ப. 20 | மல்கியா 2 | யோவான் 19 |
| 30 | 2நாளா. 35 | வெளிப்ப. 21 | மல்கியா 3 | யோவான் 20 |
| 31 | 2நாளா. 36 | வெளிப்ப. 22 | மல்கியா 4 | யோவான் 21 |




CALLIGRAPHY BY: MRS. OLIVIYA SHERIN

**STRICTLY FOR INTERNAL PURPOSE ONLY**

EDITOR

REV. S. P. BASKAR – PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UAE.

POST BOX. 67747 | TEL: +971 (3) 766 8353 | MOB: 056 766 8348

**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**